**செய்தி வெளியீடு எண்:171** **நாள்: 03.11.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை - 3.11.2017

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்திலுள்ள நிலங்களின் பாசனத்திற்காக கன்னியாகுமரி மாவட்டம், **கோதையாறு பாசனத் திட்ட அணைகளிலிருந்து** தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள கோதையாறு பாசனத் திட்ட அணைகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்திலுளள நிலங்களின் பாசனத்திற்கு இராதாபுரம் கால்வாய்க்கு **6.11.2017 முதல்** 20 நாட்களுக்கு வினாடிக்கு 75 கனஅடி வீதம் மொத்தம் 129.60 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்திலுள்ள **17,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**